தரம் 06



# தமிழ் மொழியும் இலக்கியமும்

உறவுமுறைக் கடிதம்

அலகு 05

தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்

Miss.T.Ravaneyaa
NP/Mn/Mavilankerny RCTMS, Murunkan

# தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்

- ✓ இது ஒரு உறவுமுறைக்கடிதம் ஆகும்.
- ✓ உறவுமுறைக் கடிதத்தின் அமைப்பில் அமைந்துள்ளது.

  (முகவரி, விளிப்பு, உடல், முடிப்பு)
- ✓ கடிதம் என்பது இருவருக்கிடையே இடம் பெறும் எழுத்து மூலமான தகவல் பரிமாற்றத்தைக் குறிக்கும்.
- ✓ கடிதம் என்பதன் ஒத்தசொற்களாக திருமுகம்,ஓலை,மடல்,முடங்கல்.
- ✓ பொதுவாக உறவுமுறைக்கடிதம் “பேணத்தகு பொக்கிஷமாகவே” இருக்கும்.

- ✓ போஷக்குணவின் முக்கியத்துவத்தை தந்தை மகனுக்கு விளக்குவதாக இக்கடிதம் அமைகிறது.
- ✓ அதிகளவான நிறுத்தற்குறிகளின் பயன்பாடுகளும் இங்கு கையாளப்பட்டுள்ளமையினை அவதானிக்கலாம்.

உ+ம்:- காற்புள்ளி (,)

மெய்ப்பாட்டுக்குறி (!)

மேற்கோள்க்குறி (“ ” / ‘ ’)

முற்றுப்புள்ளி (.)

# மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) "நீ எழுதிய மடல் கிடைத்தது" இதில் **மடல்** என்பதன் ஒத்தசொல்

1. கவிதை
2. புத்தகம்
3. கடிதம்
4. கட்டுரை

2) "காலாண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றது மகிழ்ச்சி" **மகிழ்ச்சி** என்பதன் எதிர்ப்பதம்

1. ஆனந்தம்
2. துக்கம்
3. இன்பம்
4. அழுகை

3) “சுவையான உணவு உடலுக்கு ஆரோக்கியம் தராது” இவ்வாக்கியத்தில் வந்துள்ள **பெயரடை**

1. ஆரோக்கியம்
2. உணவு
3. உடல்
4. சுவையான

4) “ஊட்டச்சத்து நிறைந்த உணவு நோய்நொடியிலிருந்து உடம்பைப் பாதுகாக்கும்” இதில் **நோய்நொடி** என்பது

1. இரட்டைமொழி
2. இணைமொழி
3. அடுக்குத்தொடர்
4. அடுக்கிடுக்குத்தொடர்

5) மாணவர்கள் தங்கியிருந்து படிக்கும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

1. விடுதி
2. ஆச்சிரமம்
3. பள்ளி
4. காப்பகம்

6) கை, கால், கண், மூக்கு, செவி முதலானவை வெளியுறுப்புக்களாகும். இதில் அதிகமாகக் கையாளப்பட்டுள்ள நிறுத்தற்குறியீடு

1. முற்றுப்புள்ளி
2. முக்காற்புள்ளி
3. காற்புள்ளி
4. மெய்ப்பாட்டுக்குறி

7) “நான் உங்களுக்கு வழங்கப் பெறும் உணவை உண்டேன்” இவ்வாக்கியத்தில் வந்துள்ள **பயனிலைச் சொல்**

1. நான்
2. உண்டேன்
3. வழங்கப்பெறும்
4. உணவை

8) திசுக்களைப் புதுப்பித்து உடல்வளர்ச்சிக்கு உதவும் **சத்து** எது?

1. மாவுச்சத்து
2. புரதச்சத்து
3. கொழுப்புச்சத்து
4. தாதுஉப்புக்கள்

9) மகனே! நான் உன் விடுதிக்கு வந்திருந்தேன். இவ்வாக்கியத்தில் வந்துள்ள தன்மைப் பெயர் எது?

1. மகனே
2. விடுதி
3. நான்
4. உன்

10) தந்தை மகனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்படும் தந்தையின் பெயர் என்ன?

1. அன்புச்செல்வன்
2. அருள்ச்செல்வன்
3. மணிச்செல்வன்
4. தமிழ்ச்செல்வன்

# “அ” பகுதியில் தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான சொற்களை “ஆ” பகுதியுடன் இணைக்குக

| | |
|---|---|
| 1. மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை | கொழுப்பும்,மாவுச்சத்தும் |
| 2. இதயம், நுரையீரல், மூளை | தேர்வு |
| 3. உடல்வளர்ச்சிக்கு உகந்த உணவு | தாது உப்பும்,உயிர்ச்சத்தும் |
| 4. உடலுக்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கும் | சரிவிகித உணவு |
| 5. நோய் எதிர்ப்பு சக்தி அளிக்கும் | உள்ளுறுப்புக்கள் |

## “அ” பகுதியில் தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த சொற்களை “ஆ” பகுதியுடன் இணைக்குக

| | |
|---|---|
| 6. மூக்கு | குதூகலம் |
| 7. உணவு | யாக்கை |
| 8. மகிழ்ச்சி | நேத்திரம் |
| 9. உடம்பு | சாப்பாடு |
| 10. கண் | நாசி |

## சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. நாம் உண்ணும் உணவிலுள்ள சத்துப்பொருள் நம் உடலை வளர்க்கிறது ( சரி )
2. நாம் சுவையான உணவை உண்பதால் உடல் ஆரோக்கியமடைகிறது (பிழை)
3. உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் ஐந்து வகைப்படும் ( சரி )
4. சுவையான உணவினை சரிவிகித உணவு என்பர் (பிழை)
5. உடல் நலமாக இருந்தால் தான் கல்வி கற்க முடியும் ( சரி )

## பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக

விடுதி /உடல் வளர்ச்சிக்கு /சரிவிகித உணவு /தாது உப்புக்களும் - உயிர்ச்சத்துக்களும்/ காலாண்டுத் தேர்வு /சுவரை வைத்துத் தானே சித்திரம் எழுத முடியும் /போசாக்குணவின் அவசியம் /வகுப்பில் முதன்மை பெறுகின்றமை /சுவையான உணவு வழங்கப்படுவதில்லை / உடம்பைப் போற்ற வேண்டும்

1. பெற்றார்கள் மகிழ்ச்சியடைவதற்கான காரணம் யாது?

**வகுப்பில் முதன்மை பெறுகின்றமை**

2. விடுதியில் வழங்கப்படும் உணவு பற்றி மகனின் கருத்து என்ன?

**சுவையான உணவு வழங்கப்படுவதில்லை**

3. உணவு உண்பது எதற்காக எனத் தந்தை குறிப்பிடுகிறார்?

**உடல் வளர்ச்சிக்கு**

4. மகன் எங்கே தங்கியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது?

**விடுதி**

5. உடல் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் உணவை எவ்வாறு அழைப்பர்?

**சரிவிகித உணவு**

6. இக்கடிதத்தில் இடம் பெறும் முதுமொழி யாது?

**சுவரை வைத்துத் தானே சித்திரம் எழுத முடியும்**

7. சிறந்த கல்வியைப் பெற முதலில் என்ன செய்ய வேண்டும் எனக் கூறப்படுகிறது?

**உடம்பைப் போற்ற வேண்டும்**

8. உடலுக்கு நோயெதிர்ப்பு சக்தியையும் பாதுகாப்பையும் அளிக்கும் ஊட்டச்சத்துக்கள் எவை?

**தாது உப்புக்களும் - உயிர்ச்சத்துக்களும்**

9. அருள்ச்செல்வன் வகுப்பில் முதன்மை பெற்ற தேர்வாகக் சுட்டப்படுவது எது?

**காலாண்டுத் தேர்வு**

10. இக்கடிதம் குறித்து நிற்கும் மையக்கருத்து யாது?

**போசாக்குணவின் அவசியம்**


நன்றி
வணக்கம்